**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை திரு. பா. பாலமுருகன், B.Com.B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.54/2014**

கமலம் -------- வாதி

//எதிர்//

1) அலமேலு

2) சரவணன்

3)தமிழ்நாடு அரசுசார்பாக மாவட்ட ஆட்சியர், கரூர்

4)வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குளித்தலை.

5)கிராமநிர்வாக அலுவலர், மருதுார் வடக்கு 2 கிராமம், குளித்தலை வட்டம் .

--------------பிரதிவாதிகள்

இவ்வழக்கு எனது முன்னிலையில் இன்று 28.11.2022-ம் தேதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.பிச்சைபிள்ளை அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B. மலர்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல்ஹமீது அவர்கள் முன்னிலையாகியும் வாதியை நீதிமன்றத்தில் அழைத்த போது வருகையில்லாததால் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

## தீர்ப்புரை

வாதி தாவா சொத்தை அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1,2 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, உறவினர்களோ, குடும்ப உறுப்பினர்களோ மற்றும் 1,2 பிரதிவாதிகள் சார்பாக யாரேனும் எவ்வித தடை இடைஞ்சலும் செய்யாதிருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், 3 முதல் 5 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, உறவினர்களோ, குடும்ப உறுப்பினர்களோ மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகள் சார்பாக

யாரேனும் தாவா சொத்து சம்மந்தமான வருவாய் ஆவணங்களில் 1,2 பிரதிவாதிகள் பெயர்களை சேர்க்காமலிருக்க ஒருநிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத் தொகைக்கும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முடிவாக,**

வழக்கானது விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டு, வாதியை நீதிமன்றத்தில் அழைத்த போது வருகையில்லாததாலும் அவர் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும் வாதிக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் வழக்கை மேல்நடத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காததாலும் வாதியின் வழக்கு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ம் நாளன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

S/d. Thiru.P.BalaMurugan.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.